**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 299/2022

பெயர் : சுமதி (PW2)

த/க/பெ. :

தேதி : 04.11.2024

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>3,10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் தாவா சொத்து உள்ள ஊரில் வசிக்க வில்லை என்றால் ஜெயங்கொண்டம் இளையூரில் வசிக்கிறேன். என்ன பரிகாரம் வேண்டி வழக்கு போட்டுள்ளேன் என்றால் எனக்கு பாகம் கேட்டுள்ளேன். எத்தனை ஏக்கர் சொத்து என்று எனக்கு தெரியவில்லை. ஆவணங்களை நான் பார்க்கவில்லை. தாவா வீட்டிற்கு என் தாயார் பெயரில் பட்ட கொடுத்தார்கள் என்றால் இல்லை. என் தந்தை சம்பாதித்த சொத்து. என் தயார் பெயரில் நத்தம் நிலவரி திட்டத்தில் பட்டா கொடுக்கப்பட்டது என்றால் என் தந்தை இறந்த பின்னர் கொடுக்கப்பட்டது. நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் அனுபவத்தின் அடிப்படையில் பட்டா வழுங்கப்படும் வாரிசு அடிப்படையில் இல்லை. என் தாயாருக்கு பட்டா படி கிடைத்த சொத்தை என் அண்ணி 10 வது பிரிதிவாதி கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 100 நாள் வேலை என்று என் தாயாரை ஏமாற்றி கையெழுத்து வாங்கி உள்ளார். இது தொடர்பாக புகார் கொடுத்தோமா என்றால் வழக்கு போட்டுள்ளோம். உண்மையிலேயே என் தாயாரை ஏமாற்றி கிரயம் வாங்கி இருந்தால் சட்ட நடவடிக்கை எடுத்திருப்போம் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால்சரியல்ல. முதல் அயிட்டம் 10 ம் பிரதிவாதி கிரயம் வாங்கி உள்ளதால் அது 10 ம்பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றால்சரியல்ல. எனவே, 10 பிரதிவாதிக் சொந்தமான சொத்தில் நான் பாகம் கேட்க இயலாது என்பதால் முதல் அயிட்டத்தை பொருத்து வழக்கு தள்ளுபடி செய்யகூடியது என்றால் சரியல்ல. முதல் அயிட்டம் என் தந்தைக்கு சொந்தம் என்பததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. உண்மையிலேயே என் தந்தைக்கு சொந்தமான சொத்தாக இருந்திருந்தால் முதல் அயிட்டத்திற்கு ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கு 2, 3 அயிட்ட சொத்துக்கள் 3, 4 பிரதிவாதிகள் என் சகோதரர்கள் அவர்கள் நலனுக்காக கிரயம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. தற்போது 3, 4 பிரிதிவாதிகள் மேஜர் ஆனவுடன் அவர்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்து தனிப்பட்ட சொத்தாதாக

அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 2, 3 அயிட்ட சொத்துக்கள் 3, 4 பிரதிவாதிகளின் தனிப்பட்ட சொத்து என்பதால் அவற்றின் நான் பாகம் கேட்க இயலாது என்றால் சரியல்ல. 4 ம் அயிட்ட ொசத்து என் தந்தை பெயரில் உள்ளதால் அதை பொருத்து மட்டுமே நான் பாகம் கேட்க இயலும் என்றால் சரியல்ல. 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் குடும்ப பொது சொத்து அல்ல என்பதால் அவற்றை பொருத்து நான் பாகம் கேட்க இயலாது என்றால் சரியல்ல. 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் 3, 4, 10 பிரதிவாதிகளின் தனிப்பட்ட சுவாதீனத்தில் உள்ளது என்பதால் அவற்றை பொருத்து வழக்கு தள்ளுபடி செய்யகூடியது என்றால் சரியல்ல.

**11 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

11 வது பிரதிவாதிக்கு எதிராக நான் வழக்கில் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். 11 வது பிரதிவாதிக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கேட்காததால் 11 வது பிரதிவாதியை பொருத்து வழக்கு தள்ளுபடி செய்யகூடியது என்றால் சரியல்ல.